DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.58/2023**

Prosecution **PW.4**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | கார்த்திகேயன் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | சுப்பிரமணி | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 34 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.08.2026

1, 3,4 எதிரிகள் ஆஜர் . 2ம் எதிரிக்கு எதிராக வழக்கு சிசி 08/2025 தனியாக பிரிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம் மேலக்கட்டளையில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். (**பார்வைமகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) சுமார் 2 வருடங்களுக்கு முன்பு மாயனூர் காவல் நிலையத்தில் இருந்து போன் செய்தார்கள். நான் லைசென்ஸ் அப்ளை செய்திருந்தேன் அதற்காக Verify செய்ய என்னை அழைத்தார்கள் அப்போது கையொப்பம் கேட்டார்கள் நான் கையெழுத்து போட்டேன். இந்த வழக்கு பற்றி வேறு எதுவும் எனக்குத் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அனுமதி பெறப்பட்டு பிறழ்சாட்சியாக விளம்புகை செய்யப்படுகிறார்.**

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

கடந்த 20.03.2023ம் தேதி மாலை சுமார் 04.00 மணியளவில் நான் நத்தமேடு கட்டளை ரோட்டில் சென்று கொண்டிருந்த போது அங்கு இருந்த போலிசார்

சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் வரைந்து என்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள் என்றால் சரியல்ல. தற்போது உண்மையை மறைத்து எதிரிகள் எனது ஊர்க்காரர்கள் என்பதால் எதிரிக்கு ஆதரவாக அரசு தரப்பு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>1, 3, 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.</u>**

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/—திரு.ஆர்.பாக்கியராஜ்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.